6

# இந்துச்சட்ட மூலங்களில் விவாகரத்துக் குறித்த கருத்தாடல்கள்

- ச. முகுந்தன்

## அறிமுகம்

நான்கு வேதங்கள், பதினெண் ஸ்மிருதிகள், (தர்மசாஸ்திரங்கள்), அர்த்த சாஸ்திரம், பதினெண் ஸ்மிருதிகளுக்குப் பிற்காலத்தில் செய்யப் பட்ட உரைகள் ஆகியவற்றை இந்துச் சட்ட மூலங்கள் எனக் கொள்வது மரபாகும்.

இந்துக்களின் பேரிதிகாசங்களும் பதினெண் மகாபுராணங்களும் பிரதிபலிக்கின்ற சமூகவாழ்வியல் நெறிமுறைகள் மேற்குறித்த இந்துச் சட்டமூலங்களை அடியொற்றிக் கட்டமைக்கப்பட்டவையேயாகும்.

எவ்வாறாயினும் "இந்து" என்ற கருத்துருவாக்கத்தில் இவை மட்டும் உள்ளடங்கவில்லை. அகன்ற பரதகண்டத்தில் (இதுவே பிற்காலத்தில் பாரதம் ஆயிற்று) வாழ்ந்த பல்வேறு இனக்குழுக்கள், பழங்குடிகள் ஆகியவற்றின் சமூக வழக்காறுகள், கால்வழிமரபுகள் உள்ளிட்ட பரந்த பண்பாட்டு வாழ்வியற் புலங்களின் விகசித்த இணைப்பையே அது சுட்டி நிற்கின்றது. எனவே "இந்து" என்ற ஒற்றைச் சொல்லை வெறுமனே பாரசீகரின் சுட்டுச் சொல்லாகவோ அன்றி வைதிக பௌராணிக சமயபண்பாட்டுப் புலமாகவோ ஒற்றைப் பரிமாணமாகக் கருத்துவிளக்கம் செய்வதும் பொருத்தமற்றதோர் அணுகுமுறையேயாம்.

சமூக மானிடவியல் நோக்குநிலையில் வைதிக - பௌராணி கமயப்பட்ட இந்துப்பண்பாட்டை பெரிய மரபாக அடையாளப்படுத்தும் வழக்கமுண்டு.

இந்து சமூகத்தினரை அவர்களுடைய வழக்காறுகளின் வழியே நிர்வகிப்பதற்காக இந்துச்சட்டத்திரட்டை உருவாக்குவதற்கு காலனித்துவ ஆட்சியாளர்கள் முற்பட்டனர். H.T. கோல்புறூக் போன்ற சட்ட வல்லுநர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டபோது அவர்களும் மேற்குறிப்பிட்ட "பெரிய மரபில்" விதிக்கப்பட்ட நடைமுறைகளையே மொழிபெயர்த்து "Digest of Hindu Law" என்ற பெயரில் சட்டத்திரட்டாக வெளியிட்டனர். இந்தியாவின் சுதந்திரத்துக்குப் பின்னரும் 1955ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்து திருமணச் சட்டத்திலும் இந்துச்சட்டமூலங்கள் என்ற வகையில் முற்குறிப்பிட்ட பனுவல்களின் செல்வாக்கினை அடையாளப்படுத்தும் மேற்கோள்கள் பயின்று வந்துள்ளன.

நான்கு வேதங்கள், பதினெண் ஸ்மிருதிகள், (தர்ம சாஸ்திரங்கள்), அர்த்த சாஸ்திரம், பதினெண் ஸ்மிருதி களுக்குப் பிற் காலத்தில் செய்யப் பட்ட உரைகள் ஆகியவற்றை இந்துச் சட்ட மூலங்கள் எனக் கொள்வது மரபாகும்

திருமணம் என்ற நிகழ்வானது இந்து சமூகத்தைப் பொறுத்தவரையில் சமூகநிகழ்வாக அன்றிச் சமயச்சடங்காகவே அர்த்தம் பெற்று வந்துள்ளது. திருமணத்தின் இலக்கும் லௌகிக நோக்கங்களுக்கு அப்பால் ஆன்மிகப் பெறுமதியுடையதாகக் கருதப்பட்டது. ஒரு சமூகத்தின் ஏனைய மூவகை ஆச்சிரமத்தாரையும் (மாணவநிலை, துறவுக்கு ஆயத்தமான நிலை, சந்நியாச நிலை) தாங்குகின்ற இல்லற நிலைக்குரிய கால்கோளாயும் திருமணமே அமைகிறது. திருமணத்தின் பிரதான நோக்காக முன்வைக்கப்படுகின்ற புத்திரப்பேறு ஒருவனை நரகத் துன்பத்திலிருந்து ஈடேற்றம் பெற உதவுவதாக நம்பப்பட்டது. எனவே தான் தெய்வீக சம்பந்தமுடைய புனிதச் சடங்காகிய திருமணத்தின் மூலம் கிட்டும் உறவை யதார்த்தமாக முறித்துக் கொள்வதில் இந்துச்சட்டமூலங்கள் எதிர்மறைப் போக்கையே கொண்டிருந்தன.

எனவே தான் தெய்வீக சம்பந்தமுடைய புனிதச் சடங்காகிய திருமணத்தின் மூலம் கிட்டும் உறவை யதார்த்தமாக முறித்துக் கொள்வதில் இந்துச்சட்ட மூலங்கள் எதிர்மறைப் போக்கையே கொண்டிருந்தன.

*"பிரியாதீர் தம்பதியினரே, புதல்வர்களுடனும்*
*பேரப்பிள்ளைகளுடனும் மகிழ்ந்து விளையாடி*
*உங்கள் மகிழ்ச்சி நிறைந்த இல்லத்திலே*
*ஆயுள் முழுவதும் வாழ்ந்திடுவீரே"*

*(Atharva Veda Xiv.1.21 – 22.)*

காந்தர்வ முறையில் நடைபெற்ற திருமணமேயாயினும் அது அக்கினிசாட்சியாக நிறைவேற்றப்பட்டிருப்பின் அதனை முறிவடையச் செய்ய இயலாது என்பதில் வேதங்கள் உறுதிபூண்டிருந்தன என வாத்ஸாயனர் குறிப்பிடுவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. *(Aswamy Iyangar, K., (Trans), PP 131 – 133)* .

*"திருமணவேளையில் பயபக்தியாக எடுத்துக்கொள்ளும்*
*உறுதிமொழியானது மீறப்படுமானால்*
*கணவன் மனைவி இருவரும் நரகத்துக்கே*
*செல்வீர்கள் என்பது நிச்சயமாக இருக்கிறது"*

*(Buhler, Georg ,1886: …..)*

என தர்மசாஸ்திரங்களும் மணமுறிவினைச் சட்டரீதியாக வெளிப்படையாக அனுமதிக்கவில்லை.

### விதவை மறுமணத்துக்கான பரிபூரண சுதந்திரம்

விவாகரத்தை ஆதரிக்காது போயினும் கணவன் அல்லது மனைவி இறக்கும் சந்தர்ப்பத்தில் மறுமணத்துக்கான பூரண சுதந்திரத்தினை வேத இலக்கியங்கள் இருதரப்பினர்க்கும் வழங்கியிருந்தன. குறிப்பாக விதவைப்பெண்ணுக்கான மறுமணத்தையும், சொத்துரிமையையும் வலியுறுத்தும் பல பாடல்கள் ரிக்வேதத்திலும் அதர்வவேதத்திலும் இடம்பெற்றுள்ளன.

*"எழுந்திரு பெண்ணே இப்பொழுது நீ*
*இறந்துபோன ஒருவனது அருகிலேயே கிடக்கிறாய்*
*இறந்துவிட்ட அக்கணவனிடமிருந்து விலகித்*
*தற்பொழுது நீ வாழும் உலகுக்கு வருவாய்*

*உனது கரத்தினைப் பற்றி மறுமணம்*
*செய்து கொள்ளத் தயாராக இருக்கும்*
*ஒருவனுக்கு மீண்டும் மனைவியாய்" (Rig Veda X .18.8)*

ரிக் வேதத்தில் அஸ்வினிதேவர்களை விதவைகளைப் பாதுகாக்கும்படி வேண்டுகின்ற பாடலொன்றில் மறுமணம் செய்துள்ள விதவைப் பெண்ணையும் அவளுக்கு இரண்டாவதாக வாய்க்கப்பெற்ற கணவனையும் ஆசீர்வதிக்கும்படியும் அவர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வையும் ஐஸ்வரியங்களையும் வழங்கும்படியும் வேண்டப்படுகிறது *(Ibid, X. 40.8.).*

ரிக் வேதத்தின் X 18.8 இல் இறந்த கணவனுடைய இல்லத்திலும் அவனுடைய சொத்துக்களிலும் பூரண உரித்துடையவளாக அவனுடைய மனைவி அடையாளப்படுத்தப்படுகிறார்.

ரிக் வேதத்தில் இறந்த கணவனுடைய சகோதரனை மணந்துகொள்ளும் "நியோகமுறைமை" ஏற்பட்டதற்கான காரணமே இறந்த கணவனுடைய சொத்துக்களிலும் அவனுடைய இல்லத்திலும் மனைவிக்கிருந்த சிறப்புரிமையோ என எண்ணத் தோன்றுகிறது.

அதர்வவேதத்தில் மறுமணம் யாகக்கிரியையொன்றின் மூலமாகத் தெய்வீக அந்தஸ்துடையதாக்கப்பட்டது. அந்தவகையில் "அஜபஞ்சௌதன" யாகத்தினைச் செய்வதன் மூலமாகக் குறித்த விதவையினால் மறுமணம் செய்துகொள்ள இயலும் என்ற செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது *(Atharva Veda IX. 5. 27 – 8.).*

அதர்வ வேதத்தில் மறுமணம் யாகக் கிரியை யொன்றின் மூலமாகத் தெய்வீக அந்தஸ்துடைய தாக்கப்பட்டது. அந்தவகையில் "அஜ பஞ்சௌதன" யாகத்தினைச் செய்வதன் மூலமாகக் குறித்த விதவையினால் மறுமணம் செய்து கொள்ள இயலும் என்ற செய்தி பதிவுசெய்யப் பட்டுள்ளது

## புறக்கணிப்பும் தள்ளிவைத்தலும்

வியவகார நடைமுறைகளைப் பற்றி விரிவாகப் பேசுகின்ற தர்மசாஸ்திரங்களில் "விவாகரத்து" முறைமைக்கான அங்கீகாரம் தரப்பட்டிருக்கவில்லையாயினும் இதனையொத்த சில வழக்கங்கள் குறித்து அறியமுடிகிறது. புறக்கணிப்பு (abandonment), தள்ளிவைத்தல் (supersession) என்ற இரண்டு பதப்பிரயோகங்கள் இதற்குப் பதிலீடாக இடம்பெறுகின்றன (Kane,P.V., 1930:97).

புணர்தலைக் கைவிடுதல், இல்லத்துக்குரிய மதச்சடங்குகள், கடமைகள் மற்றும் உரிமைகளிலிருந்து புறக்கணித்தல் என்பவை "புறக்கணித்தல்" என்ற நடைமுறையின் அர்த்தப்பாடாகும் என தர்ம சாஸ்திர உரையசிரியர்கள் கருதுகின்றனர்.

சமஸ்கிருதச் சொல்லான தியாகம் புறக்கணித்தலைக் குறிக்கும் வகையிலும் வழங்கியமையினை அறியமுடிகிறது. இது பல சந்தர்ப்பங் களில் மூன்று மாதகாலம் தற்காலிகமாகப் புறக்கணித்தலைச் சுட்டி நிற்கின்றது (Derret, J.D.M..,1957:25).

தம்பதியர் இருவரில் ஒருவர், அவர் செய்த தவறுக்கான பிராயச்சித்தமாகத் தற்காலிகமாக இல்லற வாழ்விலிருந்து புறக்கணிக்கப் படுகிறார். கணவனுக்குத் துரோகமிழைத்த மனைவி கணவனது

வீட்டிலேயே சிலகாலம் அலங்காரம், புணர்ச்சி சமயச்சடங்குகள் ஆகியவற்றிலிருந்து புறக்கணித்து வைக்கப்படுகின்ற நடைமுறையினை கௌதம மற்றும் வசிட்ட ஸ்மிருதிகள் முன்மொழிந்துள்ளன. எனினும் குறித்த புறக்கணிப்புக் காலத்தில் மறுமணத்துக்கான அனுமதியை அவை அளிக்கவில்லை. குறித்த பிராயச்சித்த காலம் முடிந்தபின் மனைவி மீண்டும் தனக்குரிய அங்கீகாரத்தினை இல்லத்தின் அத்தனை கருமங்களிலும் பெறுபவளாக இத்தர்மசாஸ்திரங்களில் சித்தரிக்கப் பட்டுள்ளமை நோக்கற்பாலது (Colebrooke, H.T., 1804:…..).

தள்ளிவைத்தல் என்பது புறக் கணித்தலை விடவும் தீவிரமான தாகவும் மறு மணத்தினை நோக்கிய முன்னாயத்த நகர்வாகவும் தர்மசாஸ்திர ஆசிரியர்களால் கருதப்படுகிறது.

தள்ளிவைத்தல் என்பது புறக்கணித்தலை விடவும் தீவிரமானதாகவும் மறுமணத்தினை நோக்கிய முன்னாயத்த நகர்வாகவும் தர்மசாஸ்திர ஆசிரியர்களால் கருதப்படுகிறது. குறிப்பாக வம்சவிருத்தி அல்லது ஆண்குழந்தைப்பேறு என்கிற நோக்கம் குறித்த ஏற்பாடாகவே இது பல சந்தர்ப்பங்களில் பயின்றுவந்தது.

குழந்தைப்பேறற்ற ஒரு மனைவி பத்தாவது வருடத்திலும் புதல்விகளை மட்டுமே பெற்றுத்தரும் ஒருத்தியை பன்னிரண்டாவது வருடத்திலும், இறந்த குழந்தைகளையே பெற்றுத்தருபவளைப் பதினைந்தாவது வருடத்திலும் தள்ளிவைப்பதனை பௌதாயன தர்மசாஸ்திரம் அனுமதிக்கிறது (Dutt, M.N., 1906-08).

குழந்தைப்பாக்கியம் அற்றிருப்பவளை எட்டு வருடங்களின் பின்பும் குறைமாதக் குழந்தைகளையே பிரசவிப்பவளைப் பத்து வருடத்தாலும், பெண் குழந்தைகளையே பிரசவித்துக் கொண்டிருப்பவளைப் பன்னிரண்டு வருடத்தாலும் தள்ளிவைப்பதனை அர்த்தசாஸ்திரமும் அனுமதித்துள்ளது (Shamasastri, R., 1956:…..).

குழந்தைப்பேறற்ற ஒரு மனைவியை எட்டாவது வருடத்திலும் இறந்த குழந்தைகளைத் தருபவளைப் பத்தாவது வருடத்திலும் தள்ளி வைப்பதனை மனுவும் அனுமதித்துள்ளார் (Johns, William ,1894:76.)

ஆண்மகவைக் குறிக்கும் "புத்ர" என்ற சொல்லானது "நரகத் துன்பத்தினை நீக்குபவன்" என்ற கருத்தினைத் தருகிறது. வைதீக மரபுகளின் வழியே ஆண்மகவு குறித்த விருப்புணர்வு ஆன்மீக வீடுபேறு நோக்கியதாகவும் அமைவதனால் ஆண் மகவுப்பேறு மணவாழ்வின் அவசியப்பயனாகக் கருதப்பட்டது. ஆண் மகவைப் பெற்றுத்தராத மனைவி தள்ளி வைக்கப்படவேண்டியவளாகக் கருதப்பட இதுவே பிரதான ஏதுவாகியது. ஆண் மகவுப்பேறு தந்தையின் பால்நிர்ணய குரோமோசோம்களால் தீர்மானிக்கப்படுகிறது என்கிற அறிவியல் உண்மையினை உணராது மனைவியைத் தள்ளிவைத்தல் துரதிஷ்டவசமானதே.

எவ்வாறாயினும் இவ்வாறு தள்ளிவைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மனைவியினுடைய "ஒப்புதல்" பெறப்படவேண்டும் என்ற நிலைப் பாட்டையும் சில தர்மசாஸ்திர ஆசிரியர்கள் ஆங்காங்கே வலியுறுத்தத் தவறவில்லை (Manusmirthi IX 82.).

தள்ளிவைக்கப்பட்ட ஒரு மனைவியைப் பராமரிக்கவேண்டிய கடப்பாடு அவளுடைய கணவனுக்குண்டு என்பதனையும் கணவன் மறுமணம் செய்தபின்னரும் கணவனின் வீட்டில் முன்போன்று சகல உரிமைகளுடனும் அவள் வாழ்வதற்கு உரித்துடையவள் என்றும் தர்மசாஸ்திரங்கள் கருத்துரைத்துள்ளன (Mees, G.T., 1953:53).

கணவனோ அன்றி மனைவியோ தமது துணையை நியாயமான காரணங்கள் இருப்பின் புறந்தள்ளிவைப்பதற்கான உரிமையினை இந்துப்பனுவல்கள் வழங்குகின்ற போதிலும் முறையற்ற விதத்தில் அல்லது தனது சுயநலத்தின் பொருட்டுத் திட்டமிட்டுத் துணையின் மீது பழிசுமத்தப்பட்டுப் புறந்தள்ளிவைக்கப்பட்டமை வெளிக்கொணரப்படின் மிகக் கடுமையான தண்டனைகள் முன்மொழியப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆபஸ்தம்பர் ஸ்மிருதியில் அநீதியாக மனைவியைப் புறம்தள்ளி வைத்த கணவனுக்கான தண்டனை பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

முறையற்ற விதத்தில் அல்லது தனது சுயநலத்தின் பொருட்டுத் திட்டமிட்டுத் துணையின் மீது பழிசுமத்தப் பட்டுப் புறந்தள்ளி வைக்கப்பட்டமை வெளிக் கொணரப்படின் மிகக் கடுமையான தண்டனைகள் முன்மொழியப் பட்டுள்ளன.

"எவன் ஒருவன் நீதியற்ற முயையில் தன் மனைவியைக் கைவிடுகிறானோ அவனைக் கழுதைத் தோலால் போர்த்தி ஏழு வீடுகளில் போய் மனைவியைப் புறந்தள்ளி வைத்த இவனுக்குப் பிச்சையிடுங்கள் என யாசிக்கச் செய்ய வேண்டும். இதுவே ஆறு மாாதங்களுக்கு அவனுக்கான ஜீவனோபாயமாக இருக்கவேண்டும்" (Altekar, A.S., 1952:.32).

இதுபோல மனைவி தனது கணவனைப் புறந்தள்ளியிருப்பின் அவன் 12 இரவுகள் கடும் பிராயச்சித்த நோன்பில் ஈடுபட வேண்டும்

மேலும் பணிவுடையவளும் இனிய சொற்களையே பேசுகின்றவளும் திறமையுள்ளவளும் நெறிதவறாதவளும் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாக இருக்கக் கூடியவளுமான மனைவியைப் புறந்தள்ளும் ஒரு கணவனை அரசானவன் கடுமையான தண்டனைகள் ஊடாக அவனுடைய கடமைகளை உணரவைப்பான் என நாரதஸ்மிருதி குறிப்பிடுகிறது (Jolly,J., 1889:…..).

ஒரு மனைவியானவள் திருடர் கையில் சிக்கியவளாகவோ அன்றி எதிரிகளால் வன்புணர்வுக்கு ஆளாகியவளாகவோ இயல்பிலே சண்டைக் காரியாகவோ கணவனின் இல்லத்தைவிட்டு வெளியேறியவளாகவோ இருப்பினும் அவளைக் கணவனால் புறந்தள்ளமுடியாது. அவ்வாறு புறந்தள்ளுவானேயாகில் அவன் ஒரு திருடனைப்போலத் தண்டிக்கப் படவேண்டியவனாகின்றான் என வசிட்டர் ஸ்மிருதி குறிப்பிடுகிறது (Kane,P.V., 1930:….).

### இதிகாச பௌராணிக மரபு

ஸ்மிருதிகளில் அடையாளப்படுத்தப்பட்ட விடயங்களைத் தழுவியே இதிகாச புராணங்களும் இவ்விடயங்களைப் பேசுகின்றன.

புறக்கணிப்பு - தள்ளி வைப்புக் குறித்து ஸ்மிருதிகளில் எடுத்தாளப் பட்டுள்ள துல்லியமான வேறுபாட்டைப் புராணங்களில் அடையாளங்காண முடியவில்லை.

குடும்ப அங்கத்தவர்களின் அதிருப்தி பெண்ணின் பலவீனம், கணவன் தனது மனைவிக்கு அடங்கிப் போக விரும்பாமை, இருவரில் யாரேனும் ஒருவர் மற்றவரால் ஏமாற்றப்படுதல், கணவனின் விருப்பங் களுக்கேற்றபடி தன்னை மாற்றிக் கொள்ள மனைவியானவள் முன் வராமை ஆகிய காரணங்களுக்காகப் புறக்கணித்தல் நிகழ்ததாக ஸ்ரீமத் பாகவதம் குறிப்பிடுகிறது (Bhattacharya,M.,1932: 57.).

கணவனால் புறந்தள்ளிவைக்கப்பட்ட மனைவியொருத்தி தனது சொந்த விருப்பத்தின் பேரில் மறுமணம் செய்தமை பற்றிய செய்திகளைப் புராணங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இனங்காணமுடிகிறது. “பௌனர்வ புத்திரன்” பற்றிய விளக்கத்தைப் புராணங்கள் இவ்வகை யிலேயே அளிக்கின்றமை நோக்கற்பாலது. விதவையானதன் பின்போ அல்லது கணவனால் புறந்தள்ளி வைக்கப்பட்டதன் பின்னரோ தனது சுயவிருப்பத்தின் பேரில் பிறிதொரு ஆடவனை மணம் செய்து வாழுகின்ற ஒரு பெண்ணுக்குப் பிறந்த மகனே பௌனர்வ புத்திரன் என அழைக்கப்படுகிறான் (Hazra, R.C.,1948).

கணவனால் புறந்தள்ளி வைக்கப்பட்ட மனைவி யொருத்தி தனது சொந்த விருப்பத்தின் பேரில் மறுமணம் செய்தமை பற்றிய செய்தி களைப் புராணங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இனங் காணமுடிகிறது.

புறந்தள்ளிவைத்தல் என்பது பொதுவாக மனைவியைக் குறித்தே அமைவுற்றதாயினும் கணவனைப் புறந்தள்ளி வைத்த மனைவியர் பற்றிய குறிப்புக்களும் இல்லாமலில்லை. சாஞ்சி அரசன் பகுபாலனின் இல்லப் பணிப்பெண்ணாய் இருந்த மாணவரா என்ற பெண் தனது கணவனைப் புறந்தள்ளி வைத்துவிட்டு அவனிலும் அதிக செல்வம் படைத்த ஒருவனை மறுமணம் செய்தமை பற்றிய குறிப்பும் இவ்வகையில் நோக்கற்பாலது (Bhattacharya,M., 1932: 61).

ஒரு மனைவியானவள் தனது கணவனைப் புறந்தள்ள நேரிடுதல் என்பதற்கு அவள் மறுமணம் செய்வதற்காகவோ அன்றித் துர்நடத்தையில் ஈடுபடுவதற்காகவோ என்று கருத்துவிளக்கம் செய்யத் தேவையில்லை எனக் குறிப்பிடுகின்ற ஸ்ரீமத் பாகவதம், பரஸ்பர புரிந்துணர்வை மூன்றாம் தரப்பினரால் விளங்கிக்கொள்ள இயலாது எனக் கருத்துரைத் திருப்பதும் நோக்கற்பாலது (Srimath Bhagavatham 7. 11. 28.).

கடூரமாகப் பேசுகின்ற மனைவி புறந்தள்ளி வைக்கப்பட வேண்டியவளே என்றும் கணவனால் புறந்தள்ளி வைக்கப்படும் மனை வியைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு அவளது தந்தைக்கு இருப்ப தாகவும் பிரம்மவைவர்த்த புராணம் குறிப்பிடுகிறது (Brhamavaivartha Purana 4. 25.18).

## இந்துப் பழங்குடிகளிடையே விவாகரத்து முறைமை

வைதிக இந்துசமயத்தைப் பின்பற்றும் இந்துக்களிடையே அக்கினிஹோமம் செய்து நடாத்தப்பட்ட விவாகத்தினை சாஸ்திரப்பிரமாணமாக வெற்று வெறுதாக்குவதற்கான ஏற்பாடுகள் எவையும் திட்டவட்டமாக

முன்மொழியப்படவில்லை. அர்த்தசாஸ்திரத்தில் விவாகரத்துக்கான அனுமதி குறித்த கருத்துக்கள் இலைமறைகாயாகத் தென்படுகின்றன

வைதிகமுறைப்படி நடைபெற்ற திருமணமேயாயினும் இருவரில் ஒருவர்க்கு உயிராபத்து விளைவிக்கும் முயற்சிகளில் அவர் துணை ஈடுபட்டால் மணமுறிவு தவிர்க்கவொண்ணாதது எனக் கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார். (Arthashasthra III. 2).

வைதீக முறைப்படி நடைபெற்ற திருமணமே யாயினும் இருவரில் ஒருவர்க்கு உயிராபத்து விளை விக்கும் முயற்சிகளில் அவர் துணை ஈடுபட்டால் மணமுறிவு தவிர்க்க வொண்ணாதது எனக் கௌடில்லர் குறிப் பிட்டுள்ளார்.

ஆயினும் வைதிக முறைமை சாராத இந்துசமயத்தைப் பின்பற்றும் சில இந்தியப் பழங்குடிகளிடையே விவாகரத்து வழமை இயல்பான தொன்றாய்ப் பயின்று வந்துள்ளது. தென்னிந்தியாவின் ஆந்திரப்பிரதேச மாநில இடையர்குல மக்கள், மணிப்பூரின் பழங்குடிகள் இவர்களிடையே "கஹனபா" எனப்படும் நிபந்தனையற்ற விவாகரத்து முறை காணப் பட்டுள்ளது (Sengupta, N.C., 1913:27).

வடஇந்தியாவின் சில பழங்குடியினரிடையே "Chorchitti" எனும் விவாகரத்துப் பத்திரத்தை பஞ்சாயத்துப் போன்ற ஒரு மூதவை வழங்கி அவர்கள் திருமணத்தினை செல்லுபடியாக்கும் நடைமுறை இருந் தமையினை G.S.Sastri தனது A Treatise on Hindu Law என்ற நூலில் பதிவுசெய்துள்ளமை நோக்கற்பாலது (Sastri, G.S, 1942: 169.).

தம்பதியினரிடையே தொடர்ச்சியான கருத்து முரண்பாடுகள் சச்சரவுகள் இருத்தல், கணவன் ஆண்மையற்றவனாக இருத்தல், மனைவி வேறொரு ஆடவனுடன் தவறான நடத்தையில் ஈடுபடுதல், முதலிய காரணங்களுக்காக இது வழங்கப்பட்டது. இப்படி விடுதலைப் பத்திரம் வழங்கி விவாகரத்துச் செய்யும் முறைமையானது யேவசய என்ற பெயரில் குஜராத்திலும் Pat என்ற பெயரில் மகாராஷ்டிரத்திலும் பழங்குடி மக்களிடையே பல நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்தமை யினை அறிய முடிகிறது (Lingat, R., 1973:68).

அசாம் பள்ளத்தாக்கில் வாழும் சில விவசாயப் பழங்குடியினரிடையே ஓர் ஆணும் பெண்ணும் தம்மிடையே பூசாரியின் முன்னிலையில் வெற்றிலையைப் பரிமாற்றம் (தாம்பூலம்) செய்து கொள்வது திருமண பந்தத்தில் இணைவதற்கான சட்டபூர்வ அங்கீகாரத்தினை வழங்குகிறது. அதுபோன்றே மணநீக்கம் என்ற நிகழ்வும் மிக எளிமையாக இருவரும் பூசாரிமுன் பிரசன்னமாகி வெற்றிலையை கிழித்தெறிவதன் மூலமாக உறுதிசெய்யப்படுகிறது (Ibid, p.76).

இதில் கவனத்திற்குரிய விடயம் யாதெனில், மேற்குறிப்பிட்ட பழங்குடி வழக்காறுகள் 1955ஆம் ஆண்டின் இந்துத் திருமணச்சட்டத்தின் விவாகரத்துக்குரிய பிரிவாகிய 13வது சரத்தினால் அங்கீகரிக்கப் பட்டமையேயாகும். குறித்த பழங்குடி வழக்காறுகளின் பிரகாரம் விவாகரத்துப் பெற்றவர்கள் 1955 ஆம் ஆண்டின் இந்துத்திருமணச் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றம் செல்லத் தேவையில்லை.

புராதன இந்துச்சட்டங்கள் தொடர்பில் ஆய்வுசெய்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்தியவியலாளரான H.T.கோல்புறூக் விவாகரத்தை

அதிகாரபூர்வமாக ஸ்மிருதிகள் முன்மொழியவில்லையாயினும் இந்துக் களிடையே விவாகரத்தும் மறுமணமும் இனக்குழு வாழ்க்கை ஆரம்பித்த காலந்தொட்டு வழக்காறாயுள்ளமையினை அவை அறிந்தேயிருந்தன எனக் குறிப்பிட்டுள்ளமையும் கருத்தூன்றி நோக்கப்பட வேண்டியதாகும்.

> விவாகரத்து, மறுமணம் தொடர்பில் நாரதஸ்மிருதி, பராசரஸ்மிருதி ஆகியவற்றில் உடன்பாடான குறிப்புக்களும் நியாயபூர்வமான காரணங்களும் எடுத்தாளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் ஸ்மிருதி களுக்குப் பிற்காலத்தில் உரை செய்த மேதாதி, குல்லூகப்பட்டர் முதலிய உரையாசிரியர்கள் இவற்றைக் கலிவருச்சியம் (கலிகாலத்துக்கு ஒவ்வாதது) என நிராகரித்துள்ளனர் (Basham, A.L., 1954: 260).

என்று A.L பசாம் குறிப்பிடுவதும் நோக்கற்பாலது.

எனவே இவற்றிலிருந்து ஊகிக்கப் பட வேண்டியது யாதெனில் வைதீக இலக்கிய மூலங்கள் விவாகரத்தை அதிகார பூர்வமாக முன்னிறுத்தாத போதிலும் இந்து சமூகத்தில் விவாகரத்து, மறுமணம் தொடர்பிலான வழக்காறுகள் தொன்று தொட்டுப் பயின்று வந்துள்ளன என்பதேயாம்.

எனவே, இவற்றிலிருந்து ஊகிக்கப்படவேண்டியது யாதெனில், வைதிக இலக்கிய மூலங்கள் விவாகரத்தை அதிகாரபூர்வமாக முன்னிறுத்தாத போதிலும் இந்து சமூகத்தில் விவாகரத்து, மறுமணம் தொடர்பிலான வழக்காறுகள் தொன்றுதொட்டுப் பயின்றுவந்துள்ளன என்பதேயாம். “பெரியமரபு” என சமூக மானிடவியலாளர்களால் குறிப்பிடப்படுகின்ற சமூக வெளியில் இவை புறத்தொதுக்கப்பட்ட போதிலும் சிறிய மரபில் இவற்றின் விகசிப்பை இனங்காணமுடியும். இதன் தொடர்ச்சியாகவே பழங்குடிகளிடையே காணப்படுகின்ற விவாகரத்து நடைமுறைகளை மனங்கொள்ள வேண்டியுள்ளது.

## இந்துத் திருமணச் சட்டம்

இந்துத் திருமணச்சட்டம் 1955 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி கொண்டுவரப்பட்டது.

இச்சட்டத்தின் S.13 (1) இன் கீழ் பின்வரும் காரணங்களுக்காக விவாகரத்து நடைமுறைக்கு வந்தது. அவையாவன:

- தம்பதிகளில் ஒருவர் தகாத நடத்தையில் ஈடுபடுதல்
- இந்துமதம் அல்லாத வேற்று மதத்துக்கு மாறி இந்துசமய நடைமுறை களைக் கைக்கொள்ளாதிருத்தல்
- விவாகரத்து மனுவினைச் சமர்ப்பிக்கும் திகதிக்கு முந்தைய 3 வருடங்களுக்கு குறையாத காலமாகக் குணப்படுத்த இயலாத மனநோயினால் பீடிக்கப்பட்டிருத்தல்
- இதேகாலப்பகுதி தொடர்பில் குணப்படுத்த முடியாத தொழுநோய் அல்லது மேகநோயால் பீடிக்கப்பட்டிருத்தல்
- எந்த ஒரு மதத்தினூடாகவும் உலகவாழ்வைத் துறந்து சந்நியாசம் பூண்டிருத்தல்

- தம்பதிகளுள் ஒருவரைப் பற்றி இயற்கையாக அறிந்திருக்க வேண்டியவர்களால் கூட அவர் உயிருடன் இருப்பதாக ஏழு வருடங்களுக்கு மேல் அறியாமலிருத்தல்
- எதிர்மனுதாரருக்கு எதிராகச் சட்டப்படி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கழித்தும் அதன்படி நடவாதிருத்தல்

மனைவி மனுதாரராக இருக்கும் பட்சத்தில் பின்வரும் மேலதிக காரணங்களுக்காகவும் விவாகரத்து வழங்கப்படலாம் அவையாவன:

- இச்சட்டம் அமுலாக்கப்பட முன்னர் நிறைவேற்றி வைக்கப்பட்ட எந்தத் திருமணம் சம்பந்தப்பட்ட வரையிலும், அது அமுலுக்கு வரமுன்பே கணவன் மீண்டும் திருமணம் செய்திருத்தல்
- குறித்த சட்டம் அமுலுக்கு வரமுன்னர் திருமணம் செய்யப்பட்ட வேறொரு மனைவி இத்திருமணம் நிறைவேற்றப்படும்போது உயிருடன் இருத்தல்
- கணவன், கற்பழிப்பு மற்றும் பாலியல் விகார மனோநிலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருத்தல்

**தேசவழமைச் சட்டம்**

இலங்கையின் வடமாகாணத்தில் வாழும் இந்துக்களிடையே வழங்கிவந்த சமூக வழக்காறுகளின் திரட்டாகத் தேசவழமை அமைகிறது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியில் Claasz Isaacz என்ற யாழ்ப்பாணத் திசாவையால் இது 1707 இல் தொகுக்கப்பட்டுள்ளது. டச்சு மொழியில் அமைந்திருந்த இதனை Johnston ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தார்.

தர்மசாஸ்திரங்களின் வழிவந்த வைதிகமரபுகளைத் தேசவழமை பிரதிபலிக்கவில்லை. தாய்வழியுரிமை பேணுகின்ற யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் வைதிக இந்துச் சட்டத்தின் இறுக்கமான சமயாசாரக் கட்டுப்பாடுகள் அதிகம் செல்வாக்குப் பெறமுடியவில்லை.

அந்தவகையில் விவாகரத்துத் தொடர்பிலும் வைதிகப்பண்புடைய இறுக்கமான சமயாசார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. விவாகரத்தும் மறுமணமும் பெண்ணுக்கு மிக இயல்பாகவே நிலவிய வழக்காறுகளாய் காணப்பட்டன (Tambiah, H.W., 2001:130).

எவ்வாறாயினும் தேசவழமையிலும் சொத்துரிமை தொடர்பில் விவாகரத்து மற்றும் மறுமணத்தோடு தொடர்புடைய சில நடைமுறைகளில் தர்மசாஸ்திரங்களின் செல்வாக்கினை அவதானிக்கமுடிகிறது.

தேச வழமையிலும் சொத்துரிமை தொடர்பில் விவாகரத்து மற்றும் மறுமணத்தோடு தொடர்புடைய சில நடை முறைகளில் தர்ம சாஸ்திரங்களின் செல்வாக்கினை அவதானிக்க முடிகிறது.

தேசவழமையின் பிரகாரம் மறுமணம் செய்கின்ற ஒரு பெண் தனது பூர்வீகச் சொத்தில் (தாயம்) உள்ள உரிமையைத் தனது (முதற் கணவனுக்குப் பிறந்த) குழந்தைகளுக்காகத் துறக்கவேண்டியுள்ளது.. மேலும் தேடிய தேட்டத்தில் தனக்குரிமையுடைய பாதியில் சரிபாதியைத் தனது குழந்தைகளுக்காக (முதற்கணவனுக்குப் பிறந்த) வழங்க

வேண்டியுள்ளது. இத்தகைய நிபந்தனை தர்மசாஸ்திரங்களில் குறிப்பாக மனுஸ்மிருதியில் (ix) காணப்படும் நிபந்தனையை ஒத்திருப்பதனையும் அவதானிக்க முடிகிறது.

## நிறைவாக

இந்துச் சட்டத்தின் மூலங்கள் என அறியப் படுகின்ற பனுவல்கள் விவாகரத்தினைச் சட்டரீதியாக வெளிப் படையாக ஆதரிக்க வில்லை. இதற்குப் பிரதீயீடாக அவை புறக்கணித்தல் தள்ளிவைத்தல் என்ற இரண்டு கிளை வழிகளை முன்மொழிந் துள்ளன.

இந்துச் சட்டத்தின் மூலங்கள் என அறியப்படுகின்ற பனுவல்கள் விவாகரத்தினைச் சட்டரீதியாக வெளிப்படையாக ஆதரிக்கவில்லை. இதற்குப் பிரதீயீடாக அவை புறக்கணித்தல் தள்ளிவைத்தல் என்ற இரண்டு கிளை வழிகளை முன்மொழிந்துள்ளன. இவற்றுள் முன்னையது தற்காலிகமானதாயும் பின்னையது மறுமணத்துக்கான வழிமுறையாகவும் அடையாளங் காணப்படுகின்றன.

கணவனின் இறப்பு, ஆண்வாரிசின்மை, வீரியமின்மை, நடத்தைப் பிறழ்வு, தொற்றுநோய்கள் ஆகிய காரணங்களே விவாகரத்துக்கான மாற்று ஏற்பாடுகள் குறித்த கருத்தாடல்களை இந்துச் சட்டமூலங்களில் ஏற்படுத்தியிருந்தன.

தம்பதியரில் யாராயினும் ஒருவர் இறக்கின்ற சந்தர்ப்பத்தில் மறுமணம் செய்வதில் இறுக்கமான நடைமுறைகள் காணப்பட வில்லையாயினும் துணை உயிரோடிருக்கும் பட்சத்தில் அவரை நிராகரித்தலும் மறுமணம் செய்தலும் கடுமையாக நிபந்தனைகளுக்கு உட்பட்டதாயமைந்திருந்தது.

திருமண பந்தத்தைத் தெய்வீகச் சடங்காயும் ஆன்மிக ஈடேற்றத்துக் குரிய வழிமுறையாகவும் இந்துச் சட்டமூலங்கள் கருதி யமையே இதற்கான பிரதான காரணமாகும். தந்தை வழியுரிமையுடைய பெரிய மரபைப் பிரதிபலிக்கும் சமூகங்களில் இத்தகைய இறுக்கமான இந் நடைமுறைகள் பயின்று வரினும் பழங்குடி மக்களிடையேயும் தாய்வழி யுரிமையுடைய சமூகங்களிடையேயும் விவாகரத்து தொடர்பில் இத்தகைய இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை.

## உசாத்துணைகள்

Altekar, A.S., (1952), Sources of Hindu Dharma in its Socio-Religious Aspects, Institute of Public Administration, Sholapur.

Basham, A.L., (1954), The Wonder that was India, London.

Buhler, Georg (1886) (Trans), The Sacred Books of the East Series No. XXV, Oxford.

Colebrooke, H.T., (1804), Digest of Hindu Law, Vol. I, II, Oriental Publications, Calcutta.

Colebrooke, H.T., (1869), (Trans), The Law of Inheritance, Translation of Dayabhaga of Jimutavahana and Mithaksara of Vijnanesvar, Hindustani Press, Calcutta.

Derret, J.D.M., (1957), Hindu Law Past and Present, Calcutta.

Derret, J.D.M., (1963), The Discussion of Marriage by Godahara, P.180.

Dutt, M.N., 1906-08, (Trans), Dharmasastra (2 Vols.), Elysium Press, Calcutta.

Ghose, J.C., 1906, The Principles of Hindu Law, Calcutta.

Jayaswal, K.P., 1930, Manu and Yajnavalkya, Calcutta.

Johns, William 1894, (Trans), Institutes of Hindu Law: or the Ordinances of Manu, Calcutta.

Jolly,J., 1889, The Minor Law books ( Naradha & Brhasbathi Smruthis), Sacred books of the East Series, Vol. No. XXXIII, Oxford.

Kane,P.V.,1930, A History of Dharmasastras, Vols.1-5., Bhandarkar Oriental Research Institute, Poona.

Lingat, R., 1973, Non- Classical Laws of India, Oxford University Press.

Mees, G.T.,1953, Dharma and Society, Luzac and Co.London.

Sengupta, N.C.,1913, Sources of Law and Society in Ancient India, Sengupta Trust, Calcutta,

Shamasastri, R., (Trans),1956, Kauttlya Arthashastra, Bangalore.

Tambiah, H.W., 2000, Laws and Customs of Tamils of Jaffna, Women's Education and Research Centre, Colombo.

Vidyarnava, S.C., 1909, (Trans), Yajnavalkya Smriti with the Commentary of Vijnanesvara, Panini office Allahabad.